**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.391/2022**
**Deposition of witness of Defendant – D.W.2(பாரதி)**
**24.03.2025**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் நான்கெல்லை தெரியும். கிழக்கு, மேற்கு, தெற்கில் வாரி புறம்போக்கு உள்ளது. வடக்கில் கோவிந்தசாமி பிள்ளையின் அண்ணன் குருசாமியின் இடம் உள்ளது. மேற்படி நான்கெல்லைக்குள் தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல.

2. 2, 3 பிரதிவாதிகளில் ஒருவர் மலேசியாவிலும், மற்றொருவர் திருப்பூரிலும் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் வெளியூரில் இருந்ததால் குடும்ப வரவு செலவு மற்றும் நிர்வாகத்தை அவர்களது தாயாரான 1ஆம் பிரதிவாதி ஜெயலெட்சுமி தான் கவனித்துவந்தார் என்றால் சரிதான். பெண் பிள்ளைகளுக்கு நீண்ட நாட்களுக்கு முன்பே திருமணமாகிவிட்டது என்றால் சரிதான்.

3. பிரதிவாதிகள் தாவா கிராமத்தில் வசதி வாய்ப்பானவர்கள் என்றால் சரிதான். பெண் பிள்ளைகளுக்கு அதிகமான நகை மற்றும் சீர் வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் நகைகள் ஓரளவிற்கு செய்தார்கள்.

4. பிரதிவாதிகளின் குடும்ப வரவு செலவு விவரம் 3ஆம் பிரதிவாதி முருகனுக்கு தெரியும் என்றால் சரிதான். பெண் பிள்ளைகளுக்கு குறைவாக சீர்வரிசை செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. தாவா கிராமத்தில் எனக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஒவ்வொரு சொத்தின் மதிப்பும் அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பு அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் ரூ.2,00,000/- போடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது சரியல்ல.

6. தாவா சொத்தைவிட அதிக மதிப்பு மிகுந்த சொத்துக்கள் பிரதிவாதிகள் குடும்பத்திற்கு உள்ளது என்றும், தாவா சொத்து மதிப்பு மிகுந்த சொத்து என பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7. பிரதிவாதிகளின் குடும்ப சொத்துக்களில் தாவா சொத்துதான் குறைவான மதிப்பு கொண்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் 7 வருடங்களுக்கு முன்பு 2ஆம் பிரதிவாதி கணேசன் சொல்லி தெரியும்.

8. வாதி கிரையம் வாங்கிய பிறகு அதில் ஒரு பகுதியை அவரது சகோதரர்களுக்கு இனாம் செட்டில்மென்ட் எழுதிவைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விவரம் மற்றும் வழக்கு சொத்து பற்றிய விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் தாவா சொத்திற்கான பட்டா சிட்டாவை கணேசன் எடுத்து பார்த்தார், அதன் பிறகு தான் தெரியவந்தது.

9. 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, ஏற்கனவே புதுக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அவ்வழக்கு 2019ஆம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் பிரதிவாதிகளுக்கு சாதகமாக ஒருதலைபட்ச தீர்ப்பு ஏற்பட்டுள்ளது.

10. அந்த வழக்கில் ஒருதலைபட்சதீர்ப்பு ஏற்படவில்லை என்றும், 2019ஆம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், நான் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

11. 2, 3 பிரதிவாதிகளின் கையெழுத்து எனக்கு தெரியுமா என்றால் 2ஆம் பிரதிவாதியின் கையெழுத்து எனக்கு தெரியும். வக்காலத்தில் உள்ள கையெழுத்து கணேசனின் கையெழுத்தாகும். வாதிக்கு 1ஆம் பிரதிவாதி கிரையம் கொடுத்த விவரம் 2, 3 பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றும், அவர்களது அனுமதியின் பேரில் தான் 1ஆம் பிரதிவாதி கிரையம் கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அதன் காரணமாக தான் வாதியின் கிரைய பத்திரம் செல்லாது என்றும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

12. எங்கள் ஊரில் உள்ள ராசு தொண்டைமான் மனைவி சோலைமணி என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவருக்கு 2, 3 பிரதிவாதிகள் அவர்களது குடும்ப சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தது என்றால் 3ஆம் பிரதிவாதி அழைத்து வந்தார். எனது நிரூபண வாக்குமூலத்திற்கு 3ஆம் பிரதிவாதிதான் விவரம் சொன்னார் என்றால் சரிதான். எனக்கு வழக்கு மற்றும் சொத்து பற்றி எதுவும் தெரியாது என்றும், 3ஆம் பிரதிவாதி கேட்டுக்கொண்டபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2009ஆம் ஆண்டு கிரையம் வாங்கியது முதல் தாவா சொத்தை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் கிரையம் குறித்தோ, அனுபவம் குறித்தோ எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

13. நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் குவாரியில் கணக்குபிள்ளையாக உள்ளேன். நான் குவாரியில் கணக்குபிள்ளையாக வேலை பார்க்கவில்லை என்றும், மற்ற நபர்கள் மீது மொட்டை பெட்டிசன் போடுவது மற்றும் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிப்பது தான் என் வேலை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.